செ.வெ.எண்:48 நாள்:27.01.2020

## கரூர் மாவட்டம்

## மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 18 மாற்றுதிறனாளிகளுக்கு ரூ.2.68 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., வழங்கினர்

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (27.01.2020) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கணவனால் கைவிடப்பட்டோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, வேலைவாய்ப்பு, காவல்துறை நடவடிக்கை, புதிய குடும்ப அட்டை, கல்விக்கடன், தொழில் கடன், குடிநீர் வசதி, சாலை வசதி, அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 205 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டு பரிசீலித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மனுக்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் முகாம் மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் மனுநீதி நாள் முகாம் மனுக்கள், மாவட்ட உயர் அலுவலர்களின் மனுநீதி நாள் முகாம் மனுக்கள், மக்களைத்தேடி வருவாய்த்துறை அம்மா திட்ட மக்கள் குறை தீர்க்கும் முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது அக்கரை கொண்டு அது அவர்களின் உணர்வின் வடிவமாக நினைத்து அவற்றின் மீது உரிய விசாரணை மேற்கொண்டு காலதாமதம் இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

மேலும் மாற்றுதிறனாளிகள் நலத்துறை மற்றும் மாற்றுதிறனாளிகள் நல வாரியத்தின் சார்பாக பிரசவ உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, விபத்து மரணம் உதவித்தொகை மற்றும் இயற்கை மரணம் ஈமசடங்கு உதவித்தொகையாக 18 மாற்றுதிறனாளிகளுக்கு ரூ.2.68 இலட்சம் மதிப்பிலான காசோலைகளையும், இணை இயக்குநர் மருத்துவ பணிகள் மூலம் தேசிய பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு பள்ளி மாணவியர்களுக்காக நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற 20 மாணவிகளுக்கு பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி செல்வசுரபி, மருத்துவ பணிகள் இணை இயக்குநர் மரு.பாக்கியலட்சுமி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி மகேஷ்வரி, சமூக பாதுகப்பு திட்ட தனிதுணை ஆட்சியர் திரு.பாலசுப்ரமணியன், கலால் பிரிவு உதவி ஆணையர் திருமதி.மீனாட்சி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.லீலாவதி மாவட்ட மாற்றுதிறனாளிகள் நல அலுவலர் திருமதி சென்பகவள்ளி உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**